உளி 1 | ஓசை 32 | அக்டோபர் - 2019 | திங்களிதழ்

படைப்பு

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



ஆசிரியர் :
ஜின்னா அஸ்மி

நிர்வாகக் குழு :
சகா (சலீம் கான்)
இப்ராஹிம் ஷரீப்

ஆசிரியர் குழு :
படைப்பு தேர்வுக்குழுமம்

வடிவமைப்பு :
முகம்மது புலவர் மீரான்

முகப்பு ஓவியம் :
கமல் காளிதாஸ்

உள் ஓவியங்கள் :
கலைமாமணி அன்பழகன்

இணையதள முகவரி :
www.padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
அரசு பதிவெண்: 521/2018
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்,
கடலூர்,
தமிழ்நாடு,
இந்தியா.
607002
admin@padaippu.com
9469375575

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வுசெய்யப்பட்டவை
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வர வேண்டுமெனில் முகநூல் படைப்பு குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

| | | |
|---|---|---|
| பிறைநிலா | - | 4 |
| வலங்கைமான் நூர்தீன் | - | 5 |
| அம்பிகா குமரன் | - | 6 |
| ஏ.நஸ்புள்ளாஹ் | - | 6 |
| தமிழ்மணவாளன் | - | 7 |
| மு.பெ.சத்தியநேசன் | - | 7 |
| நிலாச்சந்தர் | - | 8 |
| லக்ஷ்மி | - | 9 |
| துரை.நந்தகுமார் | - | 10 |
| ஜபீர் | - | 11 |
| ஷீலா கடற்கரை | - | 12 |
| மா.காளிதாஸ் | - | 13 |
| முனியாண்டி_ராஜ் | - | 14 |
| ராம்பெரியசாமி | - | 15 |
| சரண்யாசத்தியநாராயணன் | - | 16 |
| கோ.கலியமூர்த்தி | - | 17 |
| வதிலைபிரபா | - | 18 |
| முகமது பாட்சா | - | 18 |
| க.அம்சப்ரியா | - | 19 |
| க.சோ. திருமாவளவன் | - | 20 |
| காயத்ரி | - | 20 |
| கோபி சேகுவேரா | - | 21 |
| கருவை ந.ஸ்டாலின் | - | 22 |
| சுரேஷ்பாபு_ராசேந்திரன் | - | 22 |
| பாண்டிய ராஜ் | - | 22 |
| மதுசூதன் | - | 23 |
| அமுதா தமிழ்நாடன் | - | 23 |
| சுசீந்திரன் | - | 24 |
| கவிப்பிரியன்_ஜீவா | - | 24 |
| ப.மதியழகன் | - | 25 |
| ரவி குமாரசாமி | - | 26 |
| தெ.சு.கவுதமன் | - | 27 |
| பொள்ளாச்சி முருகானந்தம் | - | 28 |
| வணவை தூரிக | - | 28 |
| தி.கலையரசி | - | 29 |
| சுசித்ரா | - | 30 |
| ரா.ராஜசேகர் | - | 31 |
| சுபா விஜய் | - | 32 |
| டீன் கபூர் | - | 33 |
| சிவ. கருணாநிதி. | - | 34 |
| சகா | - | 35 |
| ப.ராஜகுமார் சிவன் | - | 36 |
| பரமியின் மறு பக்கம் | - | 36 |
| அன்றிலன், குப்பிச்சிபுதூர் | - | 37 |
| பிருந்தா சாரதி | - | 38 |
| கோ.வசந்தகுமாரன் | - | 39 |

# காத்திருப்பின் மொழி



ஓவியம் : அன்பழகன்

எல்லாவற்றிலிருந்தும் மௌனமாயிருக்கிறது
தனித்த இரவின் கடைசிச் சொட்டு.
ஊருக்குத் திரும்பும் அப்பாவின் பாதையில்
பூத்தபடி இருக்கும் கண்களை
சோடியம் வேபர் விளக்கு வெளிச்சத்தில்
பறக்கும் தட்டான்கள் ஈர்க்கிறது.
சாலையோரப் போக்குவரத்துக்கள்
காத்திருப்பின் பொழுதுபோக்குகளாகின்றன.
அடைக்கப்பட்ட வீடுகளில் அணைக்கப்பட்ட
விளக்குகள்
அப்பாக்கள் இருப்பதை உறுதிப்படுத்துகின்றன.
தேடலின் மணித்துளிகளை
நிலவொளியின் பிரவாகம் குளிரச் செய்கிறது.
ஊரடங்கியபின் இயற்கையை ஊதும் காற்றின்
ஓசையில்
தென்றல் கொஞ்சம் பருத்திருக்கிறது.
நிசப்தத்தின் வெகுதூரத்தில் உதிக்கும் நாய்க்
குரைப்பு
யாரோ வருவதை ஊருக்கே
அம்பலப்படுத்துகிறது.
எதிர்பாராத தருணம்
மெல்லிய வெளிச்சத்தின் தொலைதூரக்
குறுக்கிடலில்
இரவைக் கிழித்து முன்னேறுகிறது
டார்ச் லைட் ஒளி.
சமிக்ஞை உறுதிப்படுத்தப்பட்டதும்
எந்தவித நிர்பந்தமும் பூசிக்கொள்ளாத இரவு
தனது கடைசி சொட்டிலிருந்து
ஒருதுளி குழைந்து
அப்பா என்றவிழ்கிறது
..

❍ பிறைநிலா

# அருபத்தின் விரல்கள்



ஓவியம் : அன்பழகன்

பழுதடையப் போகும் புராதான பியானோவை
வாசித்தவன்
அரித்த சதுர மரச்சட்டகத்திற்குள்
சிலந்தி வலையாய் தெறிப்பிட்ட
கண்ணாடிக்குள்
இசைக்குறிப்புகளை பழுப்பேறிய புன்னகையில்
மறைத்திருந்தான்

விழிகள் ஒளிர்த்து வால்கள் விறைத்துத் திரியும்
பூச்சைகளும்
சடசடத்து இறகுகள் உதிர்த்து குறுக்கும்
நெடுக்குமாய்
முனகொலியில் புக்கும் கலப்பின புறாக்களும்
செம்மர உத்திரங்களை தாங்கிப்பிடித்து
தொங்கிக்கொண்டிருக்கும் வெளவால்களும்
இருட்டை இன்னமும் தின்று தீர்த்தப்பாடில்லை

பூட்டுடைத்து உள்பிரேவிசிக்க பேடிக்கும்
பாசிப் பச்சையம் பூசிய நிசப்த மாளிகைக்குள்
நடுங்கவைக்கும் குளிரும் நடுங்கும் இரவும் தாழ்
திறவாமல்
அமானுஷ்யத்தின் இசையைத் தேடி
நுழைகின்றன

இருள் வெண்மையாகவும் வெளிச்சம்
கருமையாகவும்
விம்மப்போகும் விசைகளாக வீரியம் சற்றும்
குறையாமல்

நிழற்படத்தில் புன்னகைத்தவன் முகம் இறுகும்
இவ்விரவு
இன்னும் இன்னும் நீளப்போகிறது
அருபத்தின் விரல்கள் பித்தான்களை
புணர்ந்துக்கொண்டிருக்கின்றன.

❍ **வலங்கைமான் நூர்தீன்**

ஒரு தரைக்கடை வியாபாரி போல
சொற்களைக் கூவி விற்கிறது உலகம்.
நீயும் நானும் சொற்களை
வாங்கச் சந்தைக்கு வந்தோம்.
வாங்கிக் கொண்டது பற்றி விவாதித்தோம்.
அவரவர் உருவம் சார்ந்து
சொற்களைப் பிரித்தோம்.
அவரவர் புரிதல் சார்ந்தும்
சொற்களைப் பிரித்தோம்.
நீயும் நானும் எதையுமே வாங்கவில்லை
எல்லாச் சொற்களும் நம் அனுபவத்தைப்
பேசும் அருஞ்சொற்பொருளாகவே புரிந்து
கொள்கிறோம்.
சந்தையில் நீயும் நானும்
வாங்கிக் கொள்ள எதுவும் சாத்தியமே.
வாழ்வின் சுவை உணர்ந்தவர்கள்
எதையும் கூவி விற்பதில்லை.
பேரம் பேசி வாங்குவதும் விற்பதும்
சந்தையின் விதி.
மகிழ்வைத் தேடிப் பயணிப்பது
பொது நியதி.

○ **அம்பிகா குமரன்**



**ஓவியம் : அன்பழகன்**

அலைகளை றெக்கைகளாய்
கற்பனை செய்த கடல்
தான் பறவையென நினைந்து
பறவை வெளியில்
றெக்கைகள் உயர்த்தி பறக்க தொடங்கியது
கடல் பறக்க தொடங்கிய சற்று நேரத்தில்
கடலில் வாழ்ந்த மீன்கள்
ஒவ்வொன்றாய்
பறவை வெளியிலிருந்து கீழே
தொப்தொப்பென விழ,
மீன்களை
கூடை வடிவமான
கண்களால் அள்ளுகிறார்கள் மனிதர்கள்
இக்காட்சியை படமெடுத்த
பெண்கள் சிலர்
சமைக்க தொடங்குகிறார்கள் மீன்களை.

○ **ஏ.நஸ்புள்ளாஹ்**

என்னிடமிருந்து ,
கற்றுக்கொள்ள உனக்கு
ஏதுமில்லை என்பதை அறிவேன்
நான்.

எனினும்,
நம்மிடம் ஏதுமில்லை என்பதை உணரும்
கம்பீரத்தை வேண்டுமெனில்
என்னிடமிருந்து
கற்றுக்கொள்ளலாம்
நீ.

❍ **தமிழ்மணவாளன்**



ஓவியம் : அன்பழகன்

மனம் கொந்தளிக்கும்
அலையாய்க் கொதிக்கிறது!
ஆழிப்பேரலையாய்
அடிமனதில் சோகம் புதைந்து
பொங்கி வெளிவரும் தவிப்பில்
தத்தளித்து நிற்கிறது!
மேலோட்டமாய் வளைந்தாடும்
அலைகளின் புன்னகைக்கு
அடியில் கனன்று கொண்டிருக்கும்
அன்பின் தீயை யாரறிவார்?
கரையைத் தொடாமலே
கடந்து செல்லும் அலைகளின்
கனவுகள் யாருக்கேனும் புரியுமோ?
உயிர்த்தொடும் அலைகளின்
உறவுகள் எட்டிநின்றே
மரணித்து விடுகின்றன!
இன்னும் இன்னும்.....
வலிகளுக்கப்பாலும் அலைகளின்
வாழ்க்கை கலைந்துபோவதில்லை!
என்றேனும் ஒருநாள்
கரைதொடுவோம்
என்ற ஒற்றை நம்பிக்கையில்
மீண்டும் அலைமோதுகிறது
அலைபாயும் மனது!

❍ **மு.பெ.சத்தியநேசன்**



ஓவியம் : அன்பழகன்

தீவிர அன்பிலான பிரியத்தை
நிர்ணயம் செய்ய இயலா
பெரு வெளியில்
கைகளை வீசித் தேடுகிறாய்
கற்பனைச் சிறகுகள்
காலின்றி பறக்கும்
நிழல்களின் நீட்சியில்
முகங்களை விட
முன் முடிவான அகோரங்களே
அதிகமாகிப் போன
தேசப் பிராந்தியத்தில்
எதைக் கொண்டு நிரப்ப?
திறக்கப் படாத
உன் இதழ்க் கோப்பையை
அறியாமலும் புரியாமலும்
மெல்லத் தொட எத்தனித்து
அலைகளிக்கப்படும்
அலையைப் போலவே
மேதித் திரும்புகிறது காற்று
மென் மழைத்தூரலாய்
நிகழ்த்தும்
அவதானிப்புகளை
கதைக்க காத்திருக்கும்
சிறு பொழுதில்
இறகுகள் இல்லாமல்
சிறகுகளுக்குள்
ஒளியும் உன்னை
வலை பின்ன இயலாமையில்
மெல்ல மறைகிறது கதிர்
தொட இயலாமல் சுருள்கிறது பகல்
சுவாசிக்கும் இச்சையில்
உனக்கும் என்க்குமான
இடைவெளி இல்லாதிருக்க
அலைபாகிறது மனது
இருந்தும்
என்ன இருக்கிறது என்னிடம்
ஆர்பரிக்கும் அன்பைத் தவிர
விரி சிறகை
கோப்பைகள் நிரம்பட்டும் அன்பால்

❍ **நிலாச்சந்தர்**

# நிழலற்ற சாலை



காதல் கண்முடியதால்
ஆசை அறுபதுநாளை
ஆறுநாளில் பறிகொடுத்து
வயிற்றுச் சுமையை
இறக்கிவைக்க இடம்
தேடிய அவளுக்கு
கிடைத்தது அந்த
சாலையோரத்துக் குடிசை

இறந்திருக்கலாம்
அப்பொழுதே என்று
அடிக்கடி நினைத்துக் கொள்கிறாள்
இப்பொழுதெல்லாம்

அவளால் இயல்பாய்
இருக்க முடிவதில்லை
தினம் தினம்
இரவில் இறந்து பகலில் பிறக்கப்
பழகியதால்
அவளின் வாதைகளுக்கு
வலிநிவாரணியும் இல்லாத
நிரந்தர சுமைதாங்கியாகிவிட்டாள்
உடம்பெல்லாம்
பிண வாடையடித்தாலும்
கொத்தும் கழுகுகள்
பறந்துகொண்டுதானிருக்கிறது அவளைச் சுற்றி

அந்த ஒற்றைக் குடிசைக்குள் மனித மிருகங்கள்
தினமும் நுழைவதால் விலங்குகளை நினைத்து
பயமில்லால் இருக்கமுடிகிறது

இருபுறமும் நெடிய
நிழல்தரும்
மரங்களும்
வருவோர் போவோருக்கு
தாகத்தை தீர்க்க
தேநீரும் சூடான
பலகாரங்களுமென
எப்பொழுதும் நிழல் சூழ்ந்திருந்தாலும்
தனிமையை விழுங்கிக் கொண்டிருக்கும்
அவளைப் பொறுத்தவரை
நிழலற்ற சாலையாகவே
நீண்டு சென்றுகொண்டிருக்கிறது
அந்த நெடுஞ்சாலை. . .

❍ **லக்ஷ்மி**

# அம்மாவின் இருத்தல்



ஓவியம் : அன்பழகன்

மூன்று மாதத்தைக் கடக்கிறது
அம்மாவின் மறைவு.
நள்ளிரவுக்கும் விடியலுக்குமான பொழுது
படுத்துக்கிடக்கிறேன் நினைவுகளோடு.
மிருதுவாய் வருடுகிறது
அம்மா மடிமீதான அதே ஆனந்தம்.
நடுநெற்றியை பட்டும் படாமலழுத்தி
தலைகோதும் அம்மாவின் விரல்கள்.
இப்போது அரூபமாய் இருக்கிறாள்
இருந்தாலும் அதே சுகம்
மேலேயிருந்துதான் வழிந்துக்கொண்டிருக்கிறது.
பதறியபடி பார்க்கிறேன்
இயங்கிக்கொண்டிருக்கிறது குளிரூட்டி.
நிலைக்குத்திய கண்களில்
அம்மாவின் முகம் தென்பட்டது.
கடந்த ஆயுத பூஜையின்போது
அம்மாவைத்த குங்குமத்தோடு
சிலிஃப் மோடில் வரும் காற்று
அம்மாவே விசுறுவதாய் உள்ளுணர்வு.
கலையும் மேகமாகிறது
இழப்பின் துயர்.
மறுபடியும் துளிர்விடுகிறது
அம்மாவுடனான வாழ்வு.
பணி நிமித்தமோ
மற்ற பிறவோ
வெளியே செல்லும்போதெல்லாம்
சொல்லிவிட்டுத்தான் செல்கிறேன்
போய்வா என்பதாகவே படுகிறது
வாசல்வரை வந்து
வழியனுப்பும் அம்மாவின் இருத்தல்.

❍ துரை.நந்தகுமார்



ஓவியம் : அன்பழகன்

என் வறண்ட புலன்களில் விதையின்
துளியாய் பொழிகிறாய் அத்துளியை
கொண்டே நதியெனநகர காடென
வேரென கிளையென சிறகென நான்

உன் ஒற்றை துளியால் உறைநிலை
புன்னகைகள் கசிந்த சிறுவிநாடியில்
கண்ணீர் விழிப்பிற்குள் பூக்களின்
அடர்வனம்

காதல் குழைந்த மூங்கிலின் வனத்தில்
நீ உரச நான் துளையாகிறேன் நம்
சுவாசமோ இசையாகிறது

உன் பிரியத்தின் பரிமாறுகிற
அனைத்தும் அன்பை வேண்டிய
வழிப்பாட்டின் துளிரும் துளிகள்

நீ வாய்த்த பிறகே கரிய இரவுகள்
நட்சத்திரங்களால் புன்னகைக்க
இரவுகள் திறந்துவிட்டிருந்தது

நீ பரிமாறுகிற ஈரங்களின்
நுனிச்சொட்டால் என் பாலைகள்
நிரம்ப சமுத்திரங்களை கடந்து
நான் உனக்காக ஓர் நந்தவனத்தை
உருவாக்க பட்டாம்பூச்சிகள்
வந்தமர்கிறது

உன் பிரியத்தின் சொற்களில்
எனக்கான வெளிச்சமிருந்தது அடர்
காதலுக்கான நிறமிருந்தது என்
நிலத்திற்கான விதையிருந்தது
உலர்வதற்கான புன்னகையிருந்தது
கற்களை அகற்றிய கரையிருந்தது

என் இருள்களில் சுடர்கிறாய்
என்னை பள்ளங்களில் சுமகிறாய்
வாழ்வு உன்னோடிருத்தலே வரம்.....

❍ ஜபீர்



ஓவியம் : அன்பழகன்

வெய்யில் பூத்துக்கிடக்கும்
வழிநெடுக
அனல் அள்ளிக் கொண்டுவந்து எறியும் காற்று
கண்ணில் மீதமிருக்கும் குளிர்ச்சியின்
மிச்சங்களைக் கவ்விக்கொண்டோடும்
வெட்டவெளி
ஆநிரைகள் எலும்பும் தோலுமாக
மண்ணிடம் புல்லெங்கே போனது என்று
விசாரித்துக்கொண்டிருக்கும்
தூரத்திலிருக்கும் மலைகள் ஊடாக மண்ணின்
குருதி சொட்டச்சொட்ட மணல் லாரிகள்
வந்துகொண்டிருந்தன
தோள்களில் கட்டித் தொங்கவிட்டிருந்த
நீர்ப்போத்தலின் மூடி திறந்து தாகம் தீர்க்கிறான்
ஆடு மாடு மேய்க்கும் ஒருவன்

யாரோ அழிக்கும் நிலம்
எனக்குமில்லாமல் எப்படிப்போகலாம்
என்றெண்ணும் ஆதிவாசியின் கூர்த்த
பார்வையுடன்
பெருமுதலாளிக்கெதிரான அம்பு நெய்யத்
தொடங்குகிறான்
யாருமறியாமல் ...
வாழும் நிலம் இன்னும் கொஞ்ச காலம்...

○ **ஷீலா கடற்கரை**



ஓவியம் : அன்பழகன்

அப்பா வேறொருத்தியோடு
வாழத் தொடங்கிய பின்
அம்மா அடையாளம் காட்டிய அப்பா
அப்பா மாதிரியே இல்லை.
காதலிப்பதான குழப்பம்
பின்தொடர்பவனை விட மோசமாக.
சனி, ஞாயிறு வேலையும்
கையைத் தொட்டுக் கூலியும் தரும்
ரெடிமேட் கார்மெண்ட்ஸ் மேனேஜருக்கு
பழைய அப்பா வயது.
சைகை மூலம்
சரியான விடை காட்டிவிட்டாள் தோழி.
காலாண்டிலேயே முக்கால்வாசி திணித்தாலும்
எழுதுகோலைத் திறந்தாலே
"வேறு எழவு தான்" கண்முன் வருகிறது. புதிய
அப்பாவுக்கும்
புதிய பாடத்திட்டத்திற்கும்
பெரிய வித்தியாசமில்லை.
புரிந்து கொள்ளப்படாததற்கான
பரிந்துரை அனுப்பும் முகவரியையும்
பழைய புத்தகங்களோடு
எடைக்குப் போட்டு விட்டாள் அம்மா.

❍ மா.காளிதாஸ்

# 'O' இன இரத்தம்



ஓவியம் : அன்பழகன்

அவனை எத்தனை ஆண்டுகள் தெரியும்
எனத் தெரியாது
கணக்கிலெடுக்க முடியா ஆண்டுகளென
கணக்கில் வைத்துக்கொள்ளுங்கள்
என் வீட்டு ஐந்தடிதான் அவனுக்கும்
பேதங்கள் நுழையாக் காலமது
அறிமுகக் கல்விகள் முடிந்தபின்
எங்கள் கல்விச் சாலைகளும் பிரிந்தன
அவனைவிட சிறந்த தேர்வுதான் எனக்கு
என்ன செய்ய
தோலின் நிறத்தில் அவன் தேர்ந்திருந்தான்
கணக்கெடுக்க முடிந்த ஆண்டுகள் கழித்து
அவனைப் பார்க்க நேர்ந்தது
அரசியல் கூட்டமொன்றில் ஆர்ப்பரித்துக்
கொண்டிருந்தான்
இனங்களின் பேதமையிலும்
மதங்களின் மயக்கத்திலும்
அவன் மனம் முழுக்க நனைத்திருந்தது
உரைகளின் இறுதியில் இறுக்கியணைத்தான்
ஐந்தடி உறக்கங்களை நினைவு கூர்ந்தான்
நட்பென்னவே கொஞ்சம் விலகியே இருந்தது
புறக்கணிப்பொன்றே சமயங்களைக்
காக்குமென்றான்
தீண்டாமை மட்டும்தான் இனங்களின்
அரணென்றான்
சிறுவயதுகளில் இல்ல பேதமன்றி
உணவுண்டதை நினைவில் செலுத்தினேன்
பாவங்களைத் தற்போது கழுவிக்
கொண்டிருப்பதாய்க் கூறினான்
ஒற்றை உணர்வினில் உளரிக் கொண்டிருந்தான்
அவனின் முருங்கை மரத்தின் உச்சிக் கொம்பில்
மதம் அரியணையிட்டு அமர்ந்திருந்தது
காலம் கரைத்த ஆண்டொன்றில்
படுக்கையொன்றில் பார்க்க நேர்ந்திருந்தது
அவனை
தன்னிலையற்றவனின் உடலுக்கு யாருடைய
குருதியோ
ஏற்றப்பட்டுக் கொண்டிருந்தது
குருதிப் பையின் சாரம் ஆய்ந்தேன்
'O' என்று மட்டும் எழுதப்பட்டிருந்தது
நினைவு தெளிந்தவுடன்தான் கேட்க வேண்டும்

❍ முனியாண்டி_ராஜ்.



ஓவியம் : அன்பழகன்

பிரபஞ்சத்தின் ஆதி கண்ணாடியை
புல்வெளியில் நிலைநிறுத்தி
வரிசையாக மனிதர்களை
நிற்க வைத்து ஒவ்வொருவராய்
பார்க்க சொல்கிறார்கள் ....

முதல் மனிதன் தன் முகத்தை
பார்த்த மறுகணத்தில்
அலறியெடுத்து ஓடியொளிகிறான்

இரண்டாமொருவன் பார்த்த கணத்தில் மயங்கி
விழ

இன்னொருவன் தயங்கி எட்டிப்பார்க்கையில்
கைகால்கள்
நடுக்கமுற்று நான் போரில்
பணி புரிகிறேன்
என்னை விட்டு விடுங்களென
இறைஞ்சுகிறான் ....

கனவு மூளும் முன்
போர் மூள்கிறது ...

நிலைக்கண்ணாடியை எதிர்கொள்ள
எத்தனிக்க இயலாதவர்கள்
கூனிக் குறுகிறார்கள் ...

அதன் வழியாக வந்த கடவுளும்
ஒரு கணம் தன்னைப்பார்த்து மிரள

என்னைப்போலொருவன்
தூக்கத்தில் பிதற்றுகிறான்

" என் கனவில் வரும் சாத்தான்களுக்கு
நான்தான்
கடவுளென ...

❍ ராம்பெரியசாமி

# ஒரு பனிக்கால புலரி



ஓவியம் : அன்பழகன்

கதிரவனின் கோர பார்வையில்
மடிய எண்ணாத சில தன்மான
பனித்துளிகளுக்கு தாமாகவே முன்வந்து
உதவிக்கொண்டிருந்தது அவ்வதிகாலை காற்று...

நானிட்ட ரங்கோலிக்கு இடையிடையில்
புள்ளி வைக்க தவறியதாய் எண்ணி
கண்களுக்கு புலப்படாத சில புள்ளிகளிட்டுக்
கொண்டிருந்தது கூனிட்ட என் முதுகிலிருந்து
தப்பிய சில பனித்துளிகள்..

பெருமாள் கோவிலில்
வரிசையில் ஐந்தாவதாக நின்றுக்கொண்டிருந்த
கதர் வேட்டியிடம் வாதிட்டபடியே
பொங்கலுக்காக யாசித்துக்கொண்டிருந்தது
வைர மோதிரம் சூடிய ஒரு ஜரிகை
வேட்டி..

காதடைத்து வெளியே வந்தாலும்
தன் கன்னம் தொட்டு
விளையாடிய பனித்துளியை
தன் உள்ளங்கையால் ஒத்தி எடுத்து
சிலிர்த்து கொண்டிருந்தது
ஐந்து வயது கூட நிரம்பிடாத ஒரு பொம்மி...

நாளை மீண்டுமென்று
பூக்களை கொஞ்சிக்கொண்டிருந்த
சில பனித்துளிகளை விரட்டிபடியே
விடிந்தது அவ் பனிக்கால புலரியென்று
அம்மா சொல்லி முடித்த வர்ணணையை பின்
தொடர்ந்தது ஜானகியின் புத்தம் புது காலை...

❍ **சரண்யாசத்தியநாராயணன்**



**ஓவியம் : அன்பழகன்**

மேகங்கள் பந்தலிட்ட வானின்கீழ்
மோகங்கள் அலையடிக்க நீள்பயணம்
தொடர்கையில்
தாகங்கள் தீர்க்கும் மலைச்சுனையாய் நீவந்தாய்

ஏதோஓர் காலத்தின் முன்பனிக்காலமும்
கோலமிட்ட தளிர்க்கரமும் பூசணிப்பூக்களும்
நினைவுகளில் சுமந்தபடி நெடுவழியில்
அலைந்தவன்மேல்
கருணையுடன் பொழிந்தது உன்
காதல்மழைச் சாரல்

ஓட்டைச் சுமந்தலையும் நத்தையைப்போல்
ஆமையைப்போல்
வீட்டைச் சுமந்தலையும் வேடிக்கை மனிதர்கள்
நடுவே
கனவுகளைக் கவிதைகளைச் சுமந்தலையும்
பித்தனை
காதல் சுமந்தபடி நீயணைத்தாய் வாரி

அலைகள் உன்பெயரைச் சொல்லி முழங்குகிற
நெடுங்கடலின் கரையோரம்
நின்று தவிக்கின்றேன்

வலையிலிருந்து வீசப்பட்ட சிறுமீன்கள் போல
துடிக்கின்றன எனது துருப்பிடித்த சொற்கள்

பசிதீர்ந்த காக்கைகள் பாடிப் பறக்கின்றன
நான்
பழைய பசியோடு காத்துக்கிடக்கிறேன்

ஒருவரை ஒருவர் போர்த்திக் குளிர்தணித்த
பழைய மழைக்காலம் நினைவில் மின்னலிட
இடியொலியில் நடுங்குகிற இதயம் துடிதுடிக்க
நெட்டைமரம்போல நெடுநேரம் நிற்கின்றேன்

எனக்குத் தெரியும்
நீ வந்துவிடுவாய்
மழை காற்றிடம் சொல்லியனுப்பும்
காற்று உன் காதில் கிசுகிசுக்கும்
தாங்காது உனக்கு

மேற்குக் கடலோரம் ஆரஞ்சுக்கனிபோல்
சூரியன் கீழிறங்கும் சுகப்பொழுதில்
இரவுக்கூந்தலில் வானவில் சூடி
நிலவைப்போல் நீவருவாய் நிச்சயம்

அன்பே
நீயற்ற கார்காலம்
நீரற்ற நிலம்போல
வெம்பி வெடிக்கும்
வெறுங்காலம்

கூட்டங்கூட்டமாக மரவட்டைகள்
கார்காலத்தைக் கொண்டாடுகின்றன
நம்மையும் அழைக்கின்றன
வா

❍ **கோ.கலியமூர்த்தி**

நீர் சொட்டச் சொட்ட நதியை
வரைந்து கொண்டிருக்கிறான்.
வண்ணக் கலவையில்
கொஞ்சம் கொஞ்சமாக
மணலைச் சேர்க்கிறான்.
இப்பொது நதி வற்றுகிறது
வண்ணங்கள் கரைகின்றன.
நதியை வரைந்தவனோ
அவனால் வரையப்பெற்ற நதியோ
அங்கில்லை.
இன்னொருமுறை அவன் வரையலாம்
மணல்கள் அற்ற நதியொன்றை.

❍ **வதிலைபிரபா**



**ஓவியம் : அன்பழகன்**

செருப்புகளைக் கழற்றிவிட்டுத்தான்
வீட்டிற்குள் நுழைந்தார்கள்...
செருப்புகள்
காவலாளிகளைப் போல்
வெளியவே காத்துக்கிடந்தன...
மீண்டும்
செருப்புகளை மாட்டிக் கொண்டவர்கள்
கோவிலின் வாசலில் கழற்றி விட்டு
உள்ளே நுழைந்து கொண்டார்கள்..
யாசிப்பவன்
களவு போகாமல் பார்த்துக் கொண்டான்...
அவர்களோடுவே
காரிலும் ஏறிக் கொண்டன செருப்புகள்...
மது விடுதிக்குள் நுழைந்தவர்கள்
அவற்றையும்
கூடவே அழைத்துச் சென்றார்கள்...
மிஞ்சிய போதையில்
செருப்புகளால்
அடித்துக் கொள்ளவும் செய்தார்கள்...
காரிலேறி பயணப்பட்டபோது...
செருப்புகள்
கால்களை விட்டுத் தொலைந்து போயின.

❍ **முகமது பாட்சா**

இந்த உறக்கமற்ற இரவில்
என்ன செயவாய் என்கிறாய்
தூரத்து மலையில்
எரியும் தீ மேலும் பரவாமல் இருக்க
மௌனப் பிரார்த்தனையில் மூழ்குவேன்

இன்று எவரேனும் பட்டினியாக
இல்லாமல் இருந்து
ஆழ்ந்து உறங்கட்டுமென வாழ்த்துவேன்
எனக்குள்

இன்றைய பகலில்
வழி தவறி வீட்டிற்குள் வந்த
வண்ணத்துப் பூச்சி தன் இருப்பிடம்
தேடி அடைந்திருக்க வேண்டுமென
வேண்டுதல்களை காற்றிலிடுவேன்

தன் குஞ்சுகளோடு
உவகையாட்டத்தில் திளைக்கும்படி
இரவு தேவதையிடம்
வரம் வேண்டி நிற்பேன்

நாளையேனும்
தெருக்குழாய் தண்ணீரில்
இச் செடிகள் குளித்து தழைக்க
வழியேதாவது பிறக்குமாவென
எதிர்பார்த்திருப்பேன்

கூடவே
இந்த இரவை
இன்னும் நெருக்கமாக
அணைத்துக் கொண்டு
உறங்காதவர்களின் கதையைக் கூறுமாறு
மன்றாடுவேன்.

❍ கு.அம்சப்ரியா



ஓவியம் : அன்பழகன்

என் பாக்கெட் சாளரங்களுக்கு
பஞ்சமில்லை
துரோகங்களுக்கு பதில் மலர்கள் நிரம்பியிருக்கும்

காற்றின் நீச்சல்களில்
என் மணம் உங்களை அடையலாம்
வருவேன் மலர்களாக
முட்களுக்கு பதில் மலரை கிரீடமாய் தருவேன்!

அன்பின் வாசம்
அலைகளிலிருப்பதில்லை
என் மலர்களில் பூத்திருக்கலாம்...

மலர்களால் அன்பினை செய்பவன்
அன்பின் கூடுகளில் துரோகங்கள்
முளைப்பதில்லை.

❍ **க.சோ. திருமாவளவன்**



**ஓவியம் : அன்பழகன்**

கொஞ்சம் கொஞ்சமாய்
விலாவிலிருந்து சிறகுகள் தென்பட்டன
அவை பென்குயினினதுவென்று
அசட்டையாய்தானிருந்தேன்
ஓரிரு நாளில் கோழிச்சிறகின் வலுவோடிருந்தது
பிரிதொரு நாளிலது கழுகின்
திறத்தோடிருப்பதாயொரு அனுமானம்
பார்க்கலாமென்றுதான் விரித்தேன்
பூமியிடித்தது
சற்றைக்கெல்லாம் மேலேகி
வானளக்க இசைந்தது
அப்போதும் இரைகொண்டெனை செங்குத்தாய்
தரையிறக்கிடப் பிரயத்தனத்துடன் பூமி
அலகின் கூர் மழுங்கியும்
வலிக்க வலிக்க உடைத்தெறிந்த எனக்கு
வானை போன்றதொரு ஆசுவாசமேது?

❍ **காயத்ரி**



ஓவியம் : அன்பழகன்

அச்சிடப்பட்ட கட்டங்களோடு சுற்றும்
ஒருசிலரை நான் பார்த்திருக்கிறேன்
பூமியை மையமாகக் கொண்ட
பூமிக்குடும்பம் பற்றிய பிரசங்க குறியீடு
அதில் சமகால அறிவியல் ஆராய்ச்சி
கோள்களும்
இல்லவே இல்லாத கோள்களும் உள்ளடங்கும்
விற்கப்படும் கட்டங்களும்
வாங்கப்படும் கட்டங்களும்
பொத்தாம் பொதுவாக ஒன்றுசேர்வதில்லை
மாறாக சாதியும் பணமும் ஒருசேர இருந்தால்
ஒன்றுசேர வாய்ப்புண்டு
அவை ஒருபோதும் காதல் மிகுதியால்
காதலின் காதலியாக வாழ வாய்ப்பில்லை
பிள்ளை பெறுவதற்கென
வேலை செய்யும் அடிமையென
நொதிக்கின்ற காமம் கொள்வதற்கென
ஒடுக்குவதற்கு புனித கட்டென
சில பரிகாரத்திற்கென செய்ப்படுபவை
முறைப்படி பரிகாரத் திருமணம்
செய்துகொண்டவர்களுக்கு
கட்டங்களும்
சூரிய சந்திரனும்
செவ்வாயும் சனியுமாய்
வாழ என்ன இருக்கிறது
சனாதனத்தை காப்பாற்றுவதை தவிர

**○ கோபி சேகுவேரா**

குளித்து முடித்து
தலை துவட்டுகையில்
நித்தியமாய் ஒட்டிக்கொண்டிருந்தது
அம்மாவின் கைமணம்...

❍ **கருவை ந.ஸ்டாலின்**



ஓவியம் : அன்பழகன்

பழத்துடன்
விதையையும்
சேர்த்தே விழுங்கிய
சிறுவயது இரவுகளில்
வயிற்றினுள்
விதை முளைத்து
மரமாகிவிடுமோ
என்றஞ்சி, உறங்காமல்
விழித்திருந்த
அறியாமை நாட்கள்
மரபணு மாற்றம்
செய்யப்படாமல்
இருந்தது - அந்த
விதையை போலவே.!

❍ **சுரேஷ்பாபு_ராசேந்திரன்**

வயதானவர் வீடு
விடிந்ததும் நிறைந்திருக்கிறது
பலரது காலணி

மதுபான கடை
கூட்ட நெரிசலில்
கடக்கும் சாலை

❍ **பாண்டிய ராஜ்**



ஓவியம் : அன்பழகன்

பிசுபிசுப்பும் வாடையும்
முள்ளென குத்தும்
அடிவயிற்றும் வலியும்
துணி வைத்த உறுத்தலை
எரிச்சலாய் சகித்தும்
அறுபதாம் எண் பேருந்தில்
எப்படியோ ஏறி இறங்கி
வீடடைந்த மாலை எப்படியோ
தாண்டிவிடும்.
தெரியவாப்போகிறது
இன்றைக்கு இரவில்
மெல்லத் தொடப் போகும்
அவனுக்கும்
திருகப் போகும் அவன்
கைகளுக்கும் மாருக்குள்ளே
இருக்கும் பெண்ணின்
வலிகள்.

❍ **மதுசூதன்**

குழந்தைக்குச்
சோறூட்டுகிறாள்
அம்மா.
ஆதிக் காலம் முதல்
அலுக்காமல் ரசிக்கிறது
நிலா.

❍ **அமுதா தமிழ்நாடன்**

# பிரபலம்



அவன்  அதிகம் பிரபலம் ஆகாமல் இருந்தான் .
ஏதோ ஒரு கணக்கில்
பிரபலமானவர்கள் வரிசையில்
அவன் பேரைப் போட்டார்கள் .
அவனிப்போது ரொம்பப் பிரபலம் ..
ஆனால் அவன் கவிதைகள் என்று
சொன்னவை
அவனுக்கும் புரியவில்லை
அவனைப் படித்த  வாசகனுக்கும் புரியவில்லை.
ஆனாலும் அவனிப்பப்  பிரபலம்.

“வட்டங்களில் கழுதை தேய்ந்து உருவானது
விரல் படாத மாமிசத்தின்
அகிலத் திரையில்
தெரிந்த ஒரு உருவம்
நான்தான் ஆதிமூலம் என்றது
படித்த பக்கங்களுக்கு அடையாளம் இடாமல்
புத்தகத்தைபாதியிலே மூடி வைத்தேன்.
அனேகமாக மூன்றாம் பிறை
மூன்று மாதம்
உபன்யா வாசம் இருக்கலாம்.’’

இப்படி நானும்
கவிதை எழுத ஆரம்பித்து விட்டேன்.
அடுத்த முறை
நீங்கள் வரும்போது
அனேகமாக நான்
பிரபலமானவர்கள் வரிசையில் இருப்பேன்.

❍ **சுசீந்திரன்.**

ன்

அப்பா
போய்சேர்ந்துவிட்ட
இந்த பத்து வருசமாய்
அவர் கயித்துக்கட்டிலிலேயே
படுத்துக் கிடக்கிறது
அவரின் நினைவு . . .

❍ **கவிப்பிரியன்_ஜீவா**

# விழுது



ஓவியம் : அன்பழகன்

ஆலமரத்தின் வேர்ப்பகுதி
நீர்நிலையில்
மூழ்கி இருந்தன
அதன் விழுதுகள் கூட
அதனை கைவிட்டுவிட்டன
விருட்சம்
தனக்குக் கீழே எதையும்
வளரவிடாது
புளிய மரத்துப் பேயைப் பற்றி
நிறைய இக்கட்டி
கதை சொல்வாள்
பொரிஉருண்டை அஞ்சம்மாள்
குச்சியை நட்டு வைத்தால் கூட
வேர் பிடித்து விடும்
முருங்கை
ஐந்து வருடம்
காத்திருந்தாள் போதும்
அன்னையைப் போல்
காவந்து பண்ணும்
தென்னை
பனங்கல்லு குடிச்சவனுக்கு
ஏது சாமி
கேட்காமலேயே
நுங்கு கொடுக்கும்
கிராமத்து பூமி.

❍ ப.மதியழகன்



நேற்று என்பது
மடிந்து போன
மயானப் பிணமாக மாறிவிட்டது.
நேற்றையப்
புன்னகைப் புற்றிலிருந்து
புறப்பட்ட பாம்புகள்
மூளைக்குள்
அருவருக்கத்தக்கதாக
உழல்கின்றன.
எவரும்
எவருக்காகவும்
இருக்கிறேன்
என்றுரைப்பதெல்லாம்
அறியாமையைப் போன்றதொரு பாவனைப்
பித்தலாட்டம்.
இன்று துவங்கும்
நாளதின்
இடர்களைத் தீர்க்க
எந்தவொரு
உறுதி மொழிச் சொற்களும்
உன்னிடமில்லை.
அன்றொரு நாள்
ஒரு வேளை
வெட்கமற்று நீ வந்தாலும்
உணவைத் துருத்திக் கொள்ள எவரும் தடை
சொல்லப் போவதில்லை.
அப்படியே வந்திடினும்
பொய்க் கண்ணீரை வடித்து
மீண்டும் அவமதித்து விடாதே.

**❍ ரவி குமாரசாமி**

**ஓவியம் : அன்பழகன்**



ஓவியம் : அன்பழகன்

வேறெந்த மாற்றமுமில்லாமல்
அப்படியேதான் வேலைக்கு வந்திருக்கிறாள்...
விதவையென்பதற்கான அடையாளமாக
எதுவுமே தென்படவில்லை...
பூவிலோ பொட்டிலோ குறையேதுமில்லை
சேலைகளின் வண்ணத்திலும் மாற்றமில்லை...
வழக்கம் போலவே சிரிக்கிறாள்
வழக்கம் போலவே வாயடிக்கிறாள்
வழக்கம்போலவே
அத்தனை வேலைகளையும்
செய்துமுடிக்கிறாள்...
இவளைச் சுற்றிய நேற்றைய உலகமோ
முற்றாக மாறியிருக்கிறது
இன்று இவளிடம்
மவுனத்தை எதிர்பார்க்கிறது
இவளுக்குப் பிடிக்குமென்றெண்ணி
எதிர்படுகையில் உச்சுக்கொட்டுகிறது
வழக்கத்திற்கு மாறாக
பரிதாப முகம் காட்டுகிறது
இனியென்ன செய்யப்போகிறாயென
அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தை
விசாரித்துப் பயமுறுத்துகிறது
குடிச்சுக் குடிச்சே அழிஞ்சானேயென
அங்கலாய்த்துப் பார்க்கிறது
சிலது மட்டும் பூ வைத்ததை
புறம்பேசவும் மறக்கவில்லை...
அத்தனையும் தாண்டி
எப்பவும்போல் சிரிக்கிறாள்
எப்பவும்போல் வாயடிக்கிறாள்...
எப்போதாவது வலிக்கையில்
சற்றே சேலையுயர்த்தி
சூடு வைக்கப்பட்ட முழங்கால் காயத்தை
ஆறி விட்டதாவென தடவிப் பார்க்கிறாள்
இன்னும் சில நாட்களில்
ஆறக்கூடும் அதுவும்...

○ **வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன்**

மழைப் பொழுதின்
மணல்வீடு கட்டச் சொல்லி
என் கைகளை உள்ளே வைத்து-
பூட்டி விட்டாள்
என் பப்புக்குட்டி.......!

அந்த வீட்டில்-
இப்போது அவள் வசிக்கிறாள்....
அந்த வீட்டில்-
இப்போது அவள் சமைக்கிறாள்.....

ஒரு குட்டியூண்டு பாட்டில் மூடியில்
மூங்கில் கீற்றுவழி-
மண் அள்ளி ஊட்டி விடுகிறாள்......

இப்போது-
தூங்க தொடங்கி விட்டாள்.....
என் கைகளை மீட்டுத்தராமலேயே.....

சகல ஐஸ்வர்யங்களோடு-
அவளைத் தாங்கிக் கொண்டிருக்கிறது
அந்த வீடும்
என் கைகளும்.......!

❍ **பொள்ளாச்சி முருகானந்தம்**



ஓவியம் : அன்பழகன்

அடுத்த
இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு
பிந்தைய அகழாய்வில்...

நம்மவர்களின்
புகழ் பரப்பப் போகிறது

ஏராளமாய் கிடைக்கப் போகும்
செல் பேசிகளும்
பிளாஸ்டிக்குகளும்
டாஸ்மாக் குப்பிகளும் ...!!

❍ **வணவை தூரிகா**

நிர்மா பவுடர் விளம்பரத்தை
பார்த்து விட்டு சர சரவென
சுற்றி கிறு கிறுவென
மயங்கி விழுந்தது...

எல்லா டி.வி ஆண்டெனாக்களையும்
மொட்டை மாடியில் நின்று
ஒப்பிட்டு ஆராய்ந்தது...

பாடாத வானொலியை தட்டித் தட்டி
திசை திருப்பி பாட வைத்தது...

விழுந்த பால் பல்லினை சிறு குழியில்
புதைத்து விட்டு
அடுத்த நாளில் புதையலை தேடி
ஏமாந்தது....

ஒரே ஒரு அண்டங்காக்காவை பார்த்தால்
கெட்ட சகுனம் என
பயந்து இன்னொன்றை தேடி
அலைந்தது...



மிதிவண்டியை முதன்முதலில்
ஓட்டி விட்டு
மூச்சிரைக்க பின்னால் ஓடிவந்த நண்பனை
திரும்பி பார்த்து தேடியது...

ஸ்நாக்ஸ் என்றால் உப்பு மிளகாய்
தடவிய நெல்லியும் மாங்காயும் என
நினைத்திருந்தது...

பொரி கடைக்காரரிடம் மறக்காமல் கொசுறு
கேட்டு நின்றது...

**ஓவியம் : அன்பழகன்**

இன்னும் எத்தனையோ பால்ய
நினைவுகளை என்னிடம் செல்லரிக்காமல்
சொல்லிக்கொண்டே இருக்கிறது என்
பாழடைந்த
மண் சுவற்று வீடு.

○ **தி.கலையரசி**



ஓவியம் : அன்பழகன்

ஆயத்த ஆடையக கண்ணாடி காட்சியறை
பொம்மைக்கு ஆகச் சிறந்த ஆடையினைத்
தன் மீதொரு முறை பொருத்திப் பார்த்து
அணிவிக்கும் போதெல்லாம்
முகமற்ற பொம்மையின் முகமாக அவளே
ஆகிறாள்..

நைந்து போன  சுடிதார் கழுத்தோரம்
மறைந்து விடுவதால் சீருடை அணிந்ததும் தனி
தோரணை வந்துவிடும் அவளுக்கு...

மீப்பெரு நீட்சியில் காதளவோடிய
விழி எழுதி அந்திவான் கன்னப்பூச்சில் அழகுப்
பொருள் விற்கையில் திரை மீனாய் பாவனை
செய்துகொள்வாள்....

பகல் முடிந்த பத்து நாழிகைக்குப்பின்
பசி மீன் துள்ள
பேருந்து கம்பிகளை பற்றிய பொழுதில்
ஒட்டிக்கொள்ள ஓடிவந்து தோற்கின்றன அவள்
உதிர்த்துவிட்டு வந்த இரவல் சிறகுகள்

கண்காணிப்புக் கருவியின் கண்படா இடத்தில்
எப்போதேனும் மடங்கி அமர்கிறாள்...

அந்நேரம்பார்த்து போய்த்தொலைக்கும்
என்னால் விரித்துப் போடும் முதல் ஆடையைத்
தேர்வு செய்வதைவிட என்ன செய்துவிட
முடியும் அவளுக்கு..?

❍ **சுசித்ரா**

# ரகசிய ரயில்



ஓவியம் : அன்பழகன்

ஓடிக்கொண்டிருக்கிறது ஒரு ரயில்
எந்த நிறுத்தமும் இல்லாமல்
உன்னையும் என்னையும் மட்டும்
ஏற்றிக்கொண்டு

கூடவே குதிரையும் யானையும்
குழந்தைகளையும் கூட்டிக்கொண்டு
சமையல் பாத்திரங்கள் வேறு
உன் பொழுதுபோக பொம்மைகளாக

இந்த ரயில் பயணம்
இதுவரை எவரும் கேட்டிரா பேரிசை
உனக்கும் எனக்கும் மட்டுமே

எவரிடமும் சொல்லிவிடாதே
இந்த ரயில் பற்றி கேட்டால்

அரசாங்க ஆட்களிடம் மட்டும்
இது ரயிலென்றே சொல்லிவிடாதே

கட்டணம்
இலவசம்
வரி
தனியார்மயமாக்கல் என
தொடர் அறிவிப்புகள்
தண்டவாளம் பெயர்க்கும்
ரணமேறினால் ரயிலும் நின்றுபோகும்

எனவே
எவரிடமும் சொல்லிவிடாதே
இந்த ரயில் பற்றி கேட்டால்

❍ ரா.ராஜசேகர்

# புழக்கடைஓநாய்கள்...



ஓவியம் : அன்பழகன்

எனது புழக்கடையில்
அவ்வப்போது வஞ்சம் தோய்ந்த
சதை உண்ணும்
ஜாதி ஓநாய்களின்
ஓலம் கேட்க கிடைக்கிறது...

ஒரு வேலை அவர்கள்
ஓநாய் வேடம் இட்ட
மனித ஜந்துகள்
ஆகக்கூடும்...

இவர்களின் வேடங்கள்
இவர்கள் விரும்பி அணிவதில்லை
அவர்களுக்கே தெரியாமல்
காலம் அவர்களுக்கு
வேடம் அணிவிக்கிறது...

பாவம் என் கண்களுக்கு
ஓநாய்களாகத் தெரியும்
இவர்களின் முகம்
அகோரமாக படுகிறது...

பின் பக்கம் சற்று எட்டிப்பார்த்தால்
ரத்தம் சொட்டி உறைந்த
காயத்தின் பிசுக்குடன்
மருந்திடப்படாத அழுகிய
நாற்றமும் புழுக்கள் நெளிய
அங்கங்கு தென்படுகிறது...

இவர்கள் காயங்களின் ரணம்
ஆற்றுப்படுத்த மனிதம்
விட்றவர்கள் ஆகக்கூடும்...

ஓநாய்களின் அழகுடன்
கூடிய ஒரு முகமுடி
அவசியமற்றது...
மனிதத்தின் பூரணத்தில்
ஒரு புன்னகை
செய்கிறேன்...
அவர்கள் என்னை
கடந்து சென்றாலும்
அவர்களின் காயத்தில்
ஒரு சொட்டு மருந்திட்டு
எனது அகத்தின் மகிழ்வும்
நான் அறிந்த மனிதம் பேசட்டும்...

அன்பே சிவம்

❍ **சுபா விஜய்**

# ஆற்றுகை புரியும் மனம்



ஓவியம் : அன்பழகன்

இப்பொழுது வீசிக்கொண்டிருக்கும்
யானைக் காற்று
எனக்குள் விரித்து வைக்கப்பட்ட குடையினைக்
குப்புறப் புரட்டிப் புரட்டி இழுத்துச் செல்கிறது.

மரக்கிளைகள் ஆடி அசைந்து
பழுத்த இலைகளைத் தேடிப் பொறுக்கி
உதிர்த்து மகிழ்கின்றன.

முயல் மயிர்கொண்ட
பாரமற்ற வித்துக்கள்
அங்குமிங்கும் விசிறி எறியப்படுகின்றன.

காற்று வீசும் திசையில் பறவைகள்
ஆகாயத்தை அண்ணார்ந்து நோக்கி
நீச்சல் பழகுவதும்,
கடல், ஆறு, குளங்களில் அலைகள்
எழுந்து மடிந்து
கழிவுகளைக் கரையொதுக்கி
கண்டிப்பதும் எனப்
பலதும் நிகழ்கின்றன.

வகுப்புத் தோழமைகளுடன்
நிலத்தையும் வானத்தையும்
கற்றுக்கொள்கின்ற
இன்றைய பாட அலகிலே
காற்றும் குடையும்
பறவைகளும் இலைகளும்
வித்துக்களும் நீர் நிலைகளும்
நுழைந்து கொள்ள
குளுகுளுவென்றாகிப் போன என் மனம்,
வழமை போன்று இன்றும்
ஆற்றுகை புரியத் தவறவில்லை.

❍ டீன் கபூர்



ஓவியம் : அன்பழகன்

புகைப்படங்கள் பார்த்து
பிடித்துப்போனது..
சீர் சமாச்சாரங்களும்
சமரசமானது..
திருமண மண்டபமும்
திருப்தியாய் அமைந்தது..

எல்லாமும் நன்றாய்
அமைந்ததில்..
மணமகன் வீட்டார்
குலதெய்வ கோவிலுக்கு
கும்பிடப் போனார்கள்..

தார் ரோட்டில் தடம் புரண்டது கார்..
சின்னசின்ன சிராய்ப்புகளோடு தப்பித்தவர்கள்,
மணமகள் ராசி
சரியில்லை என்ற
முடிவுக்கு வந்தார்கள்..

இனி.. புள்ளிகள்..

1) பேச்சளவிலேயே..
பிள்ளை வீட்டாரின்
"பெருமை"புரியவைத்தமைக்காக,
பெண்வீட்டார்
கடவுளுக்கு
நன்றி சொன்னார்கள்..

2) அடுத்த பெண்பிடித்ததும்,
குலதெய்வத்தை மாற்றாமல்
அதே கோயிலுக்கே சென்றார்கள்..

3) மணமகள் ராசி சரியில்லை
என்ற குற்றச்சாட்டிற்கு,
மணமகள் ராசி தான்
உங்களை உயிரோடு
காப்பாற்றியிருக்கு,
என்ற மணமகளின்
பதிலில் உண்மையிருந்தாலும்,
ஏற்றுக்கொள்ள மனமின்றி
திரும்பி விட்டார்கள்.

4) இதற்கு காரணமான,
யாருடைய ராசியால் இறந்தோம் என
தெரியாத,
தெரு நாயின்மேல்
புழுக்கள் நெளிந்தன..

❍ **சிவ. கருணாநிதி.**



ஓவியம் : அன்பழகன்

அங்காடி தெருவில்
அலையாடுகிறது தலைகள்,
அஞ்சுக்கும் பத்துக்கும்
பஞ்சு விற்கிறான்
கேட்காத காதுகளை குடைய....
சுயம் தொலைத்த அலைபேசிகள்
அங்குமிங்கும் ஊடாடுகிறது
நெட்டித்தள்ளிய நெரிசலில்...
உள்ளாடை விளம்பரத்தை
உற்றுப்பார்க்கிற கண்களுக்குள்
கற்பனை விரிகிறது காமமாய்...
திருடர்கள் ஜாக்கிரதை
பதாகை பார்த்த கண்கள்
தெரியாத முகத்தை தேடுகிறது...
உள்ளுக்குள் புழுங்கி
ஒளிந்து கொண்டு
உலகை பார்க்கின்றன பொம்மைகள்...
எழுத மறந்து விட்டுப்போன
விதிகள் கையேந்துகிறது
வீதியின் ஓரம்...
முதல் நாள் குப்பையை
கிளரிக்கொண்டிருக்கிறார்
முதியவர் அன்றைய பசிக்கு ...

○ சகா

அன்னதானம்
வழங்கும்
ஆலயங்களுக்கு
வெளியே....
கடவுள் கையேந்தி
நிற்கிறார்....

ஒருமுறை
அனுமதியுங்கள்
அவரும்
பசியாறிவிட்டு
போகட்டும்.....

உங்கள்
புண்ணியங்களை
அவர் பாத்திரத்திலிருந்து
எடுத்துக்கொள்ளுங்கள்...

❍ **ப.ராஜகுமார் சிவன்.**



**ஓவியம் : அன்பழகன்**

எவ்வித குறுக்கீடுமற்ற
மௌனத்தின்
அதீத கனம்
உன் உலகம்...
நிராகரித்த பக்கங்களைப்
புரட்டிப் பார்த்தே
அயர்கிறாய்..
புழுதி படிந்த நினைவுகளை
கட்டவிழ்த்துக் கொட்டுகிறாய்..
தாங்கும் ஊஞ்சலாகி விட்டேன்
சாய்ந்தாடு
சொகுசாய் ஒரு ஆட்டம்...

❍ **பரமியின் மறு பக்கம்**

# நதியாகும் இந்நாள்



ஓவியம் : அன்பழகன்

நாட்கள் எப்போதும்
நமதானதாகவே
இருப்பதில்லை.
இந்த நாளை
நான் ஒரு நதியாக்குகிறேன்.
அதற்குள் கால்
நனைத்து
அதன் ஆதி விதையினை
இப் பூமியில்
விதைக்க
அடியாழம் வரை
செல்ல எண்ணுக்கிறேன்.
இந்நதியைக் கடப்போரெல்லாம்
கல் எறிந்த வட்டம் ஒன்றை
தருவிக்கிறார்கள்.
இடையே நதியை விட்டு
வெளியேற உத்தரவும்
வருகிறது.
இருந்தும் இந்நாள்
என்னும் நதி
வினாடிகளில்
பயணித்து நேற்றைய
கடலோடு கலக்கிறது.
இனி நாளைய
நாளை நான்
ஒரு மரமாக்க
உத்தேசித்துள்ளேன்.

❍ **அன்றிலன், குப்பிச்சிபுதூர்**

# எங்கிருக்கிறது உன் அழகு?

அழகிப் போட்டி
எதிலும் கலந்துகொண்டு
எந்தப் பட்டமும் பெறாதவள் நீ .

ஆனாலும்
உலக அழகிகளை விட
உன்னத அழகியென்று
உன்னைத்தான் கூறுவேன்.

சாயம் பூசிக்
கண்ணைக் கவரும் கவர்ச்சியிலா இருக்கிறது
உன் உதட்டழகு?

கைவிடப்பட்டக் குழந்தையொன்றைக்
கையில் அள்ளி முத்தமிட்டாயே...
அந்த அன்பில் இருக்கிறது
உன் அதரங்களின் அழகு.

அழகு நிலையங்களில் திருத்தம் செய்யப்பட்ட
புருவ ஒழுங்கிலோ
கருமை தீட்டப்பட்ட
இமை முடிகளிலோவா இருக்கிறது
உன் விழியழகு?

விபத்தொன்றில் கொத்துக்கொத்தாய்
மனித உடல்கள் சிதறிக்கிடந்த
தொலைக்காட்சிச் செய்தியைப்
பார்த்துக்கொண்டிருக்கும்
போதே
கண்ணீர் கசிந்ததே...
அந்த மனித நேசத்தில் இருக்கிறது
உன் கண்களின் அழகு.

கச்சிதமாய் நகம் வெட்டி
வண்ணப் பாலிஷ் போட்டு
சுத்தமாய் மிளிர வைப்பதிருப்பதிலா இருக்கிறது
உன் கைளின் அழகு?

அடை மழை நாளொன்றில்
சேற்றில் சரிந்து கிடந்த செடியொன்றை
எடுத்து
மீண்டும் நட்டு வைத்தாயே
அந்தக் கருணையில் இருக்கிறது
உன் கரங்களின் அழகு.

நூற்றுக்கணக்கான
வெறித்த கண்களுக்கு நடுவே
நீச்சல் உடை அணிந்து ஒயிலாகப் பூனை
நடை நடப்பதிலா இருக்கிறது
உன் கால்களின் அழகு?

போக்குவரத்து நிறைந்த சாலை ஒன்றின்
குறுக்கே ஓடிய
குட்டி நாயொன்றை
அவசரமாக ஓடிப் போய்
அடிபடாமல் காத்தாயே...

அந்தப் பதற்றமும் பரபரப்புமான
பாதங்களில் இருக்கிறது
உன் கால்களின் அழகு.

மழையில் நனைந்த தக்காளியின் தோல் போல்
மின்னுமே...
அந்த பளபளப்பிலா இருக்கிறது
உன் அடிவயிற்றின் அழகு?

இல்லை...
அடுத்தவர் பசியையும் உன் வயிற்றால்
அறிவாயே
உன் தாய்மையில் அல்லவா இருக்கிறது அது?

மார்பளவு இடையளவு தொடையளவு
கச்சிதமாக
அமைந்திருக்கும்
கவர்ச்சி மிகுந்த உடலில் அல்ல...

அதற்குள்
துடித்துக்கொண்டிருக்கிறதே
குழந்தைத்தனம் மாறாமல் ஒரு இதயம்...

அதன் தெய்வீகத்தில் இருக்கிறது
அப்பழுக்கற்ற உன்
அழகு.

❍ **பிருந்தா சாரதி**



ஓவியம் : அன்பழகன்

யாரோ ஒரு பெண்ணின்
கழிவிரக்கமாகக்கிடைக்கப்பெற்ற
ஒரு கிழிந்த புடவையை
இடையில் சுற்றிக்கொண்டு திரிகிறான்
ஒரு பைத்தியக்காரன்.

அவனது விரைத்த குறி
விலக்கப்பட்ட கனிபோல
ஆடையைத் துருத்திக்கொண்டு
அளக்கிறது இருவேறு திசைகளை.

யாருமடையமுடியாத
மரணமற்ற ஒரு உலகுக்கேங்கும்
இயல்புகளற்ற விழிகளில்
இனம்காணமுடியாதொரு ஏக்கம்.

அவன் பயணம் ஒரு வட்டம்.
புறக்கணிக்கப்பட்ட இடத்திற்கே
வந்து சேருதலைவிடவும்
துயரமிக்கதொன்றுமில்லையென்னும்
அவன் உணர்வை
மடுப்பதற்கில்லை எந்தச் செவியும்.

மழைக்கு அவன் ஒதுங்கும்
கோயில் திண்ணையிலிருந்து
அவனை விரட்டியடிக்கும்
இரக்கமற்ற மனிதர்களைத்
தண்டிக்கும் அதிகாரமற்றவனாகவே
இருக்கிறான்
அக்கோயிலில் உறையும் கடவுள்!

பாம்புகளைப் போல்
நெளியத் தெரியாது
நாய்களின் வாலுக்கு.

நாய்களின்
வால் மொழியறிந்த நாள் முதல்
அவைகளோடு உண்டு உறங்கும்
வாழ்வியலை
நேசிக்கத் தொடங்கிவிட்டான்
அனிச்சையாக.

நாயாகத் தன்னையவன்
உணரும் தருணங்களில்
மினுமினுக்கத் தொடங்கிவிடுகின்றன
அவன் கண்கள்.

தன் பிருஷ்டத்தை
ஏக்கத்தோடு தடவிப்பார்த்து
தனக்கும் ஒரு வால்முளைக்கவேண்டுமென்கிற
பிரார்த்தனையோடு
தன்னைப் புறக்கணித்த கோயிலை
வலம் வரத் தொடங்கிவிட்டான் அவன்!

○ கோ.வசந்தகுமாரன்

# புதிய நூல்கள் வெளியீடு












































**புத்தகம் வேண்டி தொடர்புக்கு : சலீம் கான் - 9790821981**